வரலாற்றுப் பார்வை:

## தேர்தல்களுக்கான பண்டையகால கல்வெட்டு ஆதாரங்கள்:
## வைகுண்ட பெருமாள் கோவில், உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்



**வைகுண்ட பெருமாள் கோமிலில் கண்டெடுக்கப்பட்ட கி.பி 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலம் கிராம நிர்வாகத்தை விளக்கும் கல்வெட்டுகள்.**




தேர்தல் முறை
"முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பேரா தீட்டி,
இப்பன்னிரண்டு சேரியிலுமாக இக்குடும்பு வெவ்வேறு ஓலைப்பூட்டி
முப்பதுகுடும்பும் வெவ்வேறே கட்டிக் குடம்புக இடுவதாகவும், குடவோலை
பறிக்கும் போது, மகாஸபைத் திருவடியாரை ஆபாலவிருத்தம் நிரம்ப
உடபுக்கக்கொண்டு, அன்று உள்ளூரிலிருந்த நம்பிமார் ஒருவரையும்
ஒழியாமே உள்மண்டகத்திலே இருத்திக்கொண்டு ...... அனந்தரம்
அருபாலனைக் கொண்டு ஒரு குடும்பு வாங்கி மற்றொரு குடத்துக்கே
புகலிட்டு, இக்குடத்தில் ஓர் ஓலை வாங்கி மத்தியஸ்தன் கையிலே
கொடுப்பதாகவும், அக்குடத்து ஓலை மத்தியஸ்தன் வாங்கும்போது
ஐந்து விரலும் அகலவைத்து உள்ளங்கையில் ஏற்றுக் கொள
வாஙுகவும் ......... வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும்,
இப்பரிசே முப்பது குடும்பிலும் ஓரோபேர் கொள்வதாகவும்
...... வியவஸ்தை செய்தோம், உத்திரமேரூர் சதுர்வேதி
மங்கலத்து ஸபையோம் ......
எழுதினேன் மத்தியஸ்தன் காட்டிப் போத்தன்
சிவக்குறி இராஜமல்ல மங்கலப் பிரியனேன்"


இதன்படி வேட்பாளர்களுக்கு:
1. கால்வேலி நிலமாவது சொத்து தேவை
2. தன் மனையில் வீடு வேண்டும்.
3. வயது முப்பதைந்துக்குமேல் எழுபதுக்குள் இருத்தல் வேண்டும்.
4. வேதம், பாஷ்யங்கள், மந்திர ப்ராம்மணம் இவற்றில்
எடுத்துரைக்கும் புலமை வேண்டும்.
5. ஆசாரம் வேண்டும்.
6. முந்தின மூன்றுண்டுகளுக்கு இப்பதவி வகிக்காதவனாக
இருக்க வேண்டும்.
இதற்கு தகுதியற்றவர்கள் பின்வருமாறு:
1. பதவி வகித்து பின் கணக்கு காட்டாதிருந்தவன், இவர்களுடைய
உறவினர்களும், தாயாதிகளும் கூட தகுதியற்றவர்கள்.
2. அகம்யாகமனம் பிறர் மனைவி புணர்ந்தவன் செய்தவனும், கொலை,
களவு, பொய், கள்ளுண்ணல் முதலிய நான்கு மகாபாதகங்களைச்
செய்தவனும் இவற்றிற்கு பிராயச்சித்தம் செய்திருப்பினும் தகுதியற்றவனே.
3. ஸாகஸக்காரன். 4. உண்ணத்தகாததை உண்டவன்.
பதவிக்காலம் முந்நூற்றறுபது நாட்கள். அது முடிந்தபிறகு
தானே விலகிவிட வேண்டும். இடையில் தவறு செய்தால்
உடனே விலக்கப்பட்டு விடுவான்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர், வைகுந்த பெருமாள் கோயிலில் காணப்படும் 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள், சபைகள் மற்றும் செயற்குழுக்களின் மூலம் செயல்படுத்தப்பட்ட கிராம நிர்வாக அமைப்பை விவரிக்கிறது.

பண்டைக்காலத்திலேயே கிராமங்கள் வார்டுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வார்டிலும் வசித்தவர்கள் அந்தந்த வார்டுகளின் மக்கள் பிரதிநிதிகளை “குடவோலை முறை“ என்றழைக்கப்பட்ட முறையில் தேர்ந்தெடுத்தனர் என்பதை அறியும்போது வியப்பாக உள்ளது. தேர்தல் நடத்துவதற்கான நன்கு வடிவமைக்கப்பட்ட நடத்தை நெறிகள் இருந்தன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறுதியிட்ட தகுதிகளும் தகுதியின்மைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன.

*******